RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/DOI

OPEN ACCESS

# ஆற்றுப்படை இலக்கியங்களில் உணவுகள் வெளிப்படுத்தும் தமிழர் வாழ்வியல்

**சா. யமுனாதேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Tamil Bioethics as Revealed By Food in Aatruppadai Literature

**S. Yamunadevi** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: sydyamunadevi@gmail.com

Received: 03-04-2024
Revised: 23-06-2024
Accepted: 01-07-2024
Published: 29-07-2024

Check for updates

**ABSTRACT**

Food, clothing and shelter are the necessities of man. Hunger may have been the primary emotion that drove man. The feeling of hunger must have motivated him to think and act and achieve civilization and culture. Primitive man survived by hunting animals for his food. Thinking of cooking food as time goes by, he started a fire with pebbles. The discovery of fire placed him at the forefront of civilization. He started cooking his food with fire and taking care of himself. And in course of time he started to grow his own food. Next, he set up permanent settlements on the banks of the river and tried to live as a community. Food also created a condition of mass living for production. Looking at it in that way, it can be said that human life as a community is for food. Such food is the purpose of this article to explore the messages about Tamil life expressed in the literature.

**Keywords:** Sanga Literature, Naval Literature, Tirumuru Air Force, Porunararu Force, Sirupanaru Force, Cuisine, Tamil Life Science.

## முன்னுரை

உணவின் பொருட்டு உருவான சமுதாயம் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று நாகரீகம் நிறைந்த, பண்பாடு நிறைந்த சமூகமாக மாறியது. அச்சமூகத்தில் மொழிகளும் கலைகளும் இலக்கியங்களும் தோன்றின. தமிழ் இலக்கியங்களில் முதன்மை இலக்கியமாக அறியப்படுபவை சங்க இலக்கியங்கள். சங்ககாலம் என்பது வளமார்ந்த சமூகமாக இருந்திருக்க வாய்ப்புள்ளதை இவ்விலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. காதல், வீரம், போர் முறை, அகப்புறவாழ்வியல், நாகரீகம், உணவு முறைகள் உள்ளிட்ட அக்கால மக்களின் வாழ்வியல் பதிவுகளாக சங்க இலக்கியங்கள் அறியப்படுகின்றன. சங்ககாலம் என்பது குறித்தான கால வரையறையில் அறிஞர்களிடையே பல கருத்துக்கள் இருந்தாலும் கி.மு. இரண்டாம்நூற்றாண்டிலிருந்துகி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலான காலத்தை சங்ககாலம் எனக்கருதலாம். சங்ககாலத்தில் தோன்றிய நூல்கள் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு. இதன் பொருண்மைகளாக தலைவன் தலைவியரது ஒத்த உள்ள உணர்வுகளைப்பாடும் அகமும் ஆண்மகன்களது வீரம் உள்ளிட்ட ஒழுகலாறுகளைப் பாடும் புறஇலக்கியமும் இவை கடந்து புரவலரிடம் இரவலரை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை இலக்கியங்களும் காணப்படுகின்றன.

## ஆற்றுப்படை இலக்கியங்கள்

ஆற்றுப்படை என்பதற்கு வழிப்படுத்துதல் என்பது பொருளாகும். அக்காலபாணரில் ஒருவர் தன் வறுமையை ஒரு மன்னனைப்பாடி, அவர் தந்த பரிசிலைக் கொண்டு போக்கி இருப்பார். தான் தன் வறுமை நிலையினைப் போக்கியதைப் போல தன் குலத்தில் உள்ள இன்னொரு பாணனையும் அதே மன்னனிடம் வழிப்படுத்துவதே ஆற்றுப்படையாகும்.

“கூத்தரும்பாணரும்பொருநரும்விறலியும்

ஆற்றிடைக்காட்சிஉறழத்தோன்றப்

பெற்றபெருவளம்பெறாஅர்க்குஅறிவுறீஇச்

சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும்” (தொல்.புறத்திணையியல் -36)

என ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளது தொல்காப்பியம்.

சங்ககாலத்தை இலக்கியங்கள் குறிப்பிடக் கூடிய செய்திகள் அடிப்படையில் பொற்காலம் எனத்தமிழறிஞர்கள் குறித்தாலும் அங்கும் பசிப்பிணியோடு வாழ்ந்த மக்கள் பற்றியப் பதிவுகளும் காணக்கிடைக்கின்றன. பத்துப்பாட்டு நூல்களில் உள்ள ஐந்து ஆற்றுப்படைகளில் முதலாவது திருமுருகாற்றுப்படை. இதன் ஆசிரியர் நக்கீரர் அருள் வேண்டி அடியவர்களை முருகனிடம் ஆற்றப்படுத்துகிறார். ஆனால் மீதமுள்ள நான்கு ஆற்றுப்படைகளாகிய சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை இவை வறுமையின்பாட்பட்ட ஒரு புலவன் இன்னொரு புலவனை ஒரு மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளன. இந்த ஆற்றுப்படை இலக்கியங்களில் மன்னனது நகர சிறப்பைக் கூறும் இடத்தில் அம்மன்னன் ஊரில் சிறந்து விளங்கிய உணவுகளும் அவர் புலவருக்குக் கொடுத்த விருந்துகளும் காணப்படுகின்றன. சங்க கால விருந்து முறைகுறித்த அறிய இவை உதவுகின்றன.

## உணவு

சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணையாக நிலம் பிரிக்கப்பட்டு மக்களின் வாழ்வியல் பாடப்பட்ட காலமாகும். தொல்காப்பியர் நிலத்தையும் பொழுதையும் முதற்பொருள் எனவும் அந்நிலத்தில் உள்ளதெய்வம், உணவு உள்ளிட்டபதி நான்கு பொருட்களைக் கருப்பொருட்கள் எனவும் அந்நிலத்தில் தலைவன் தலைவியது ஒழுக்கத்தை உரிப்பொருள் எனவும் பிரித்துச் செல்கையில் நிலத்தில் உள்ள தெய்த்தைத் தொடர்ந்து அங்குள்ள உணவு என்பது பெரிதும் முக்கியத்துவம் பெரும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு கருப்பொருளில் ஒன்றாகக் குறித்துள்ளார். அந்தந்த நிலத்தை சார்ந்த மக்கள் அங்கு கிடைக்கும் உணவை உண்டு வாழ்தலே இயற்கையான வாழ்வு எனும் கருத்தாக்கம் இதிலிருந்து பெறப்படுகிறது. ஆனால் இன்று நாம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கிடைக்கும் உணவுகளைச் சுவைத்து பார்க்க வேதலைப்படுகிறோம். மண்சார்ந்த, உடலுக்கு ஏற்ற உணவுகளைத் தவிர்த்து வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துரித உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்றவற்றை விரும்பும் சமூகமாகமாறியுள்ளது வருந்தத்தக்கது.

உணவு என்பது நிலத்தில் விளையும் நெல், தானியங்கள், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட சாத்விக பொருட்களோடு உயிரினங்கள் தரக்கூடிய பால், பால் பொருட்கள், ஆடு, மாடு, கோழி போன்றவற்றின் இறைச்சிகள் இவற்றின் தொகுப்பை மனிதன் உண்ணும் உணவு எனலாம். இவை மனிதனின் உடலிற்குத் தேவையான ஆற்றலைத் தந்து இயக்குகிறது. உணவு பற்றி சங்க இலக்கியப் புறநானூற்றுபாடல் "உணவெனப்படுவது நிலத்தோடு நீரே" (புறநானூற்று- 18) என்கிறது. நிலத்தில் விளையக் கூடிய உணவுப் பொருளும் விண்ணிலிருந்து பொழியக் கூடிய மழை நீரும் மனிதனின் உடலை கட்டமைக்க கூடிய உணவு என்று பொருள்படுகிறது.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என உணவால் உடம்பைப் பேணி உயிரை வளர்க்கும் மாண்பை எடுத்துரைக்கிறார் திருமூலர்." உடம்பார் அழியில் உயிரால் அழிவர்" (திருமூலர், திருமந்திரம் - 724) என உடம்பை உணவால் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தைத் திருமந்திரத்தில் திருமூலர் வலியுறுத்துகிறார். அதனாலேயே வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன் என வருந்தி ஜீவகாருண்யத்தை பேணும் பொருட்டு தன்னுடைய சமரச சன்மார்க்க சங்கத்தில் இடையரா அன்னதானம் செய்தார் வள்ளலார். உடலிற்கு இன்றியமையா உணவு ஆற்றுப்படை நூல்களில் பல வகைகளில் காணக்கிடைக்கின்றன.

## திருமுருகாற்றுப் படை வெளிப்படுத்தும் உணவும் வாழ்வியலும்

திரு முருகாற்றுப்படையில் முருகன் வீற்றிருக்கக் கூடிய அறுபடை வீடுகளையும் நக்கீரர் பாடுகையில் அந்தந்த நிலங்களில் உள்ள உணவுகள் பற்றிய குறிப்புகளையும் பாடியுள்ளார். திருச்செந்தூரில் அருகே உள்ள போர்க்களத்தில் பேய்களின் உணவாக மனித உடல்களும் ரத்தமும் உள்ளதைக் காணமுடிகிறது. அதையடுத்து குன்று தோர் ஆடலில் அங்குள்ளவேடுவர்கள் மலைகளில் கிடைக்க கூடியதேனை மூங்கில் குழாய்களில் ஊற்றிப் பாதுகாத்து உண்பதையும் பதிவு செய்துள்ளார்.

"கணவர் நீடு அமை விளைந்த தேக்கள்

தேறல்குன்றகச்சிறுகுடிகிளையுடன்மகிழ்ந்து"

(ஞா.மாணிக்கவாசகன்" (உ.ஆ) பத்துப்பாட்டு,ப.33)

திணை தெய்வமாகிய முருக வழிபாட்டில் தினையரிசிதூவிவழிபடுதல், ஆடு படையல் இடுதல் போன்றவை நிகழ்த்தப்பட்டதற்கான சான்றுகளைத் திரு முருகாற்றுப் படை வழங்குகிறது. மேலும் இறைவனுக்கு வெள்ளை அரிசிசோற்றோடு கொழுத்த கடாவின் குருதி கலந்து, சிறு பலியாக வெண்ணிற பொரிது விவழிபடும் வழக்கம் இருந்துள்ளது. பழமுதிர் சோலை முருகனுக்கு இப்படையல் வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. அரிசியோடு ரத்தம் கலந்து படையலிடும் நிலையையும் திரு முருகாற்றுப்படை காட்டுகிறது. மேலும் மலை மக்கள் தினை அரிசியோடு பூக்களையும் கலந்துதூவி ஆடு பலியிட்டு முருகனை வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு குறிஞ்சி நிலத்தின் தலைவனாக அறியப்படும் முருகனுக் குதினையும் ஆட்டுக்கிடா படையலும் படைக்கப்பட்ட தைத்திரு முருகாற்றுப் படைபறை சாற்றுகிறது. மலையில் கடுமையாக உழைக்கும் மக்கள் தினையரிசியோடு மாமிச உணவையும் உண்ண வேண்டிய தேவை இருந்திருக்கலாம். அதனால் திணை தெய்வமாகிய முருகனுக்குப் படையலிடுவதன் மூலம் தங்கள் உணவாகவும் அதனை மாற்றியிருக்க வாய்ப்புள்ளது.

பேய்களின் உணவாக உடலும் ரத்தமும் இருந்ததையும் மனிதர்களின் உணவாக தினையரிசி, தேன் போன்றவையும் இறைவனுக்குப் படைக்கப்படும் உணவுகளில் தினையரிசியும் ஆட்டுக்கிடாவும் இருந்ததை திருமுருகாற்றுப்படை வழி அறிய முடிகிறது. அந்தந்த நிலத்தில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களைப் படைத்து நிலத்தலைவனை, இறைவனை வழிபடும் பான்மை அங்கிருந்துள்ளது.

## பொரு நராற்றுப்படை வெளிப்படுத்தும் உணவும் வாழ்வியலும்

தினையரிசி, அரிசிச் சோறு, கீரை வகைகள், நெல்லிக்கனி, புளிக்கறி, வறுத்த மீன், ஆட்டிறைச்சி, நண்டுக்கறி, காட்டுப்பசுவின் இறைச்சி, மலைத்தேன்கள், தேறல் போன்றவை பொரு நராற்றுப்படை வெளிப்படுத்தும் உணவு வகைகள் ஆகும்.

கரிகாற் பெரு வளத்தானிடம் பொருநனை ஆற்றுப்படுத்துவதாக முடத்தாமக் கண்ணியார் எழுதிய இலக்கியம் பொருணராற்றுப்படையாகும். இது 248 அடிகளைக் கொண்டநூல். அக்காலத்தில் திருவிழாக்களின் போது விருந்தினர்களுக்கு உணவிடுவது என்பது பெரு வழக்காக இருந்துள்ளது. திருவிழா முடிந்த பின்பும் சில நாட்கள் உணவிடுவது எனும் நிலையில் அங்கு இருக்கக் கூடிய பொருநர்கள் அங்கே தங்கி உணவு உண்பதை ஏளனமாகக் கருதி, பிற ஊர்களைத் தேடிச் சென்ற

நிலையைக் காண முடிகிறது. மேலும் கரிகாற் பெருவளத்தானின் நாட்டிற்குச் சென்றவுடன் ஏழ்மை நிலையில் மெலிந்து சென்ற பாணன் அங்கு இட்ட உணவை உண்டு இரையுண்டபாம்பைப் போல் உடல் பருத்து தன் தளர்ச்சியைப் போக்கிய நிலையை

"நன் பெருவாயில்

இசையோன்புக்கு, என் இடும்பை தீர

எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகி

பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப"

என்கிறார் ஆசிரியர்.

இவ்வாறு பொருநனை வரவேற்று அவன் உடற்சோர்வை உணவால் நீக்கி மேலும் கரிகாற் பெருவளத்தான், காலை உணவாக செம்மறியாட்டின் தொடைக்கறியை அவனே பரிமாறி புலவனை உண்பிக்கிறார். மேலும் மற்றொரு நாள் முல்லை மொக்கு போன்ற தவிடு நீக்கிய முனை முறியாத விரல் நுனி போன்ற அரிசிச் சோற்றை வறுத்துப் போட்ட பொறிக்கறியோடு கொடுத்து உண்ணச் செய்தான்.

"மகிழ்பதம்பல்நாள்கழிப்பிஒருநாள்

'அவிழ்பதம்கொள்க' என்றுஇரப்ப, முகிழ்த்தகை

முரவைபோக்கியமுரியாஅரிசி

விரல்எனநிமிர்ந்தநிரல்அமைபுழுக்கல்

பரல்வறைக்கருணைகாடியின்மிதப்ப

அயின்றகாலைபயின்றுஇனிதுஇருந்து

கொல்லைஉழுகொழுஏய்ப்பபல்லேஎல்லையும்இரவும்ஊன்தின்று"

(ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ) பத்துப்பாட்டு, பக்.64 - 65)

என பொருநராற்றுப்படையில் பரிசில் வேண்டிச் சென்ற பொரு நன்மாமிச உணவு உண்ட நிலையை, நிலத்தை ஏர் கொண்டு இடையறாது உழுதலை போல தானும் தன்பற்களால் கரிகாற் பெரு வளத்தான் கொடுத்த மாமிச உணவை உண்டு வெறுத்ததாக உவமித்து பதிவு செய்கிறார். இதிலிருந்து விருந்தாக வருபவர்களுக்கு சைவம் மற்றும் அசைவ உணவுகளை அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்து உபசரித்த தமிழரின் பாங்கு புலப்படுகிறது.

## சிறுபாணாற்றுப் படையில் உணவும் வாழ்வியலும்

சிறுபாணாற்றுப் படை ஓய்மா நாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய பாடல் ஆகும். சிறு பானனை ஓய்மா நாடு நோக்கி ஆற்றப்படுத்துவதாக அமைந்துள்ளது இவ்விலக்கியம். நெல்லிக்கனி, குப்பைக்கீரைகள், வறுத்த குழல்மீன், புளிக்கறி, காட்டுப்பசுவின் இறைச்சி, அரிசிச்சோறு, நண்டுக்கறி உள்ளிட்ட பலவகை உணவுகளை அம்மக்கள் உண்டுள்ளனர்.

அதியன் தமிழ் மொழியை வளர்க்கும் பொருட்டு கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த கொடை மாண்பு விளங்குகிறது. தமிழர் அமிர்தம் எனினும் தனித்துண்ணார் எனும் பண்பாட்டின் வெளிப்பாடாக இந்நிகழ்வு காணக்கிடைக்கிறது.

பெரும் பாணாற்றுப்படையில் பாலும் சோறும் கோவலர் தரும் உணவாகக் காணப்படுகிறது. இந்நாட்டிற்கு விருந்தினராகச் சென்றால் பசி, பஞ்சம், வறுமைத்துயரெல்லாம் நீங்கும் எனப்புலவர் மொழிகிறார். இவ்வூரில் உப்பு வணிகர்கள் வந்து செல்வது வாடிக்கை. அங்கே புல்லரிசியைக்

கிணற்றில் ஊறும் உப்பு நீரைக் கொண்டு வேகவைத்து அதோடு உப்புக் கண்டத்தை வேக வைத்து, இட்டு உண்பது அவர்களின் வழக்கம். அதைப்பாணர்களுக்கும் விருந்தாகக் கொடுப்பார்கள். மேலும் மருத நிலத்தில் பாலும் சோறும் தந்து உபசரிப்பார்கள். அதே போல் மோருக்கு விற்ற நெல்லைக் கொண்டு வந்து சோறாக்கிச்சுற்றதாரோடு உண்பார்கள். வெண்ணெய் உருக்கி பெற்ற நெய், தினை அரிசிச் சோற்றோடு பால் கலந்து உண்பார்கள்.

ஆற்றுப்படை நூல்களில் ஒன்றான மலை படுகடாமிலும் பலாச்சுளை, தேன், தினைஅரிசி, நெல், சேம்பு, பழவகைகள் போன்றவை உணவுப் பொருட்களாகப் பட்டியல் நீள்வதைக் காண முடிகிறது. நெய்ச் சோற்று விருந்திடுவதையும் அறியமுடிகிறது.

## முடிவுரை

ஆற்றுப்படை நூல்களின் வழி பிறருக்கு உணவு கொடுத்து விருந்து புறப்பதை அக்காலத் தமிழர்கள் பெருமையாகக் கருதிய மாண்பு புலப்படுகிறது. விருந்தாக வருபவர்களுக்கு சைவம் மற்றும் அசைவ உணவுகளை அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்து உபசரித்த தமிழரின் பண்பாடு நேக்கத்தக்கது. அதியன் தமிழ் மொழியை வளர்க்கும் பொருட்டு கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த கொடை மாண்பும் விளங்குகிறது. தமிழர் அமிர்தம் எனினும் தனித்துண்ணார் எனும் பண்பாட்டின் வெளிப்பாடாக இந்நிகழ்வு காணக்கிடைக்கிறது

## References

மாணிக்கவாசகன். ஞா (உ.ஆ) பத்துப்பாட்டு, உமாபதிப்பகம்சென்னை, 01, 2016.

பாக்கியமேரி.போ, தமிழ்இலக்கியவரலாறு, பூவேந்தன்பதிப்பகம், சென்னை, 2019.

சுப்பிரமணியன்.ச.வே. தொல்காப்பியம், மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம், 2009.

புறநானூறு, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை, 2004.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License